வரையில் சித்திரை முதல் நாளாக இருப்பதன் காரணமாக ஆண்டுப் பிறப்பு என்று கருதப்படுகிற காரணத்தால் அந்த ஒரு நாளை விடுமுறையாக வைத்துக் கொண்டு, 15 ஆம் தேதியோடு 16-ஆம் தேதியையும் சேர்த்து வைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற் படுமானால் 13—4—1987 மற்றும் 15--4--1987 ஆகிய இரு நாட் களையும் வறட்சிப் பகுதிகளைப் பார்க்கிற நாட்களாக வைத்துக் கொண்டு 16-ஆம் நாளன்று அரசு அலுவலர்களுடன் கலந்து பேசு கிற நாளாக வைத்துக் கொள்கிற சூழ்நிலை ஏற்படும். அவர்கள் 12—4—1987 அன்று மாலை வருவதாக இருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை நகரில் உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கு வதில் தாமதம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் உணவுப் பங்கீட்டு அட்டை கிடைக் காத பலர், மனுச் செய்தும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை உணவுப் பங்கீட்டு அட்டை வழங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் 1986-ம் ஆண்டில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறை உதவி ஆணையாளர்களிடம் புதியதாக குடும்ப அட்டைகள் கேட்டு 5,682 பேர் விண்ணப்பம் செய்தனர். மேலும் 6,329 பேர் முன்பு இருந்த இடங்களில் குடும்ப அட்டையை திருப்பிக் கொடுத்து விட்ட சான்றிதழுடன், புதிய குடும்ப அட்டைகள் கேட்டு விண்ணப்பித்தனர். ஆக மொத்தம் 12,011 பேர் விண்ணப்பித்தனர். அதில் 9,381 பேருக்கு புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டு விட்டது. விண்ணப்பங்களில் கொடுத் திருந்த முகவரியில், விண்ணப்பதாரர்கள் இல்லாததாலும், முன்பு

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 8

இருந்த இடத்தில் வைத்திருந்த குடும்ப அட்டையில் விண்ணப்ப தாரர்களின் பெயர் நீக்கப்பட்டதற்கான சான்றிதழோ அல்லது குடும்ப அட்டையை அதிகாரிகளிடம் திருப்பிக் கொடுப்பதற்கான சான்றிதழோ கொடுக்காததாலும், விண்ணப்பதில் கொடுக்கப்பட்ட முகவரியிலிருந்து குடிபெயர்ந்து சென்று விட்டதாலும், 2,498 விண்ணப்பதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்கப் படவில்லை. விண்ணப்பதாரர்களிடம் சில விவரங்கள் கேட்டு அவர்கள் இதுவரை தராததாலும், விசாரணைக்கு சென்ற போது வீடுகள் பூட்டி இருந்ததாலும், புரசைவாக்கம், தியாகராயநகர், அம்பத்தூர் மண்டலங்களில் 132 விண்ணப்பதாரர்களுக்கு புதிய அட்டைகள் இன்னும் வழங்கப்படாமல் உள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து, சரியான விவரங்களுடனும், சான்றிதழ்களுடனும் வரும் விண்ணப்பங்களுக்கு காலதாமதம் இன்றி புதிய அட்டைகள் வழங்கப்படுகின்றன என்பதை அறியலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன்கார்டுகளை ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள்தான் பயன்படுத்தி வருகிறார்கள். சென்னை நகரில், குறிப்பாக என்னுடைய தொகுதியான சேப்பாக்கத்தில் 1982-ஆம் ஆண்டு ரேஷன் கார்டுகள் தரப்பட்டன. என் தொகுதியில் மட்டும் எவ்வளவு கார்டுகள் தரப்பட்டன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் 1986 ஆம் ஆண்டோடு அந்த ரேஷன் கார்டுகள் காலாவதியாவதால் புதிய அட்டைகள் வழங்கப் படாமல் வெறும் சிலிப்—ஒரு காகிதம்—மட்டும் தான் தரப் படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? எனவே புதுப்பிக்கப்பட்ட ரேஷன் கார்டு அட்டைகள் அவர் களுக்குத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பிக்கப்பட்ட அட்டைகள் இந்த ஆண்டு வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் ஏற்கெனவே எவ்வளவு கார்டுகள் வழங்கப்பட்டன என்பதற்கான விவரம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் பல மக்களுக்கு ரேஷன் கார்டு கிடைக்காமல் இருக்கின்றது. சான்றிதழ் வழங்கியும் கூட, அவர்களுடைய மனுக்கள் இன்னும்

1987 ஏப்ரல் 8] [திரு. அ. ரகுமான்கான்]

பரிசீலனை செய்யப்படாமல் இருக்கின்றன. பாதிக்கப்பட்ட பலருடைய வீடுகளுக்கு இன்னும் அதிகாரிகள் வராமல் இருக்கிற காரணத்தால் பல மனுக்கள் பைசல் செய்யப்படாமலேயே இருக்கின்றன. அதன் காரணமாகப் புதிய கார்டுகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. இந்தக் குறைகள் நீக்கப்பட்டு மனுக்கள் மீது புதிய கார்டுகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படிக் குறை இருக்குமானால் நிவர்த்திக்கப்படும்.

(ஆ) மதுரை கோட்ஸ் ஆலைத் தொழிலாளர்கள் குடியிருக்கும் ஹார்விப்பட்டி நகரியத்தின் பராமரிப்புப் பணிகள்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கோட்ஸ் தொழிலாளர்கள் குடியிருப்பான ஹார்விப்பட்டி நகரியத்தின் குடிநீர், தெருவிளக்கு, சாலை, சாக்கடை ஆகிய அடிப்படை வசதிகளைப் பராமரித்திட, ஒப்பந்தத்தின்படி கடமைப்பட்ட மதுரை கோட்ஸ் மில் நிர்வாகம் கடந்த பல ஆண்டுகளாகப் பராமரிப்புப் பணிகளைச் செய்திடாத காரணத்தால், நகரியத்தில் ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு குறித்தும் அதனால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

ஹார்விப்பட்டி என்பது மதுரை கோட்ஸ் லிமிடெட் என்ற நூற்பு ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் குடியிருக்கும் ஒரு நகரியம் ஆகும். இந்த நகரியத்தை செயல் அலுவலர் (Executive Officer) நிர்வகித்து வருகிறார். இந்நகரியத்தைப் பராமரிக்க மதுரை கோட்ஸ் நிர்வாகம் ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் ஏதும் செய்துகொள்ளவில்லை எனவும், ஹார்விப்பட்டி நகரியத்தைப் பஞ்சாயத்தாக மாற்றும்படி மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், அவ்வாறு ஹார்விப்பட்டி நகரியம் பஞ்சாயத்தாக மாற்றப்படும்வரை மதுரை கோட்ஸ்